மலர். ௫

நாட்டின் உயிர் நிலை

★

[சிறு ஆராய்ச்சி]

★

N. R. Padmanabhan.

விலை அணா நான்கு

ஸ்ரீ. சா. கணேசன் அவர்கட்கு
அன்பளிப்பு.
N.R. Padmanabhan
7.6.41.

நினைவு மலர். க

நாட்டின் உயிர் நிலை

★

[சிறு ஆராய்ச்சி]

ஆசிரியர்:—
N. R. பத்மநாபன்.
காரைக்குடி.

623

இ/ம6

முகவுரை

நம் நாடு விடுதலை வேட்கையில் மூழ்ந்து நிற்கும் இத்தருவாயில், இச் சிறுநூல் வெளியிடும் வசதி பெற்றேன். எம்மான் காந்தியடிகள் மொழிவழியே கிராமங்களை நாடிச்செல்லும் ஊழியர்கட்கும் தலைவர் கட்கும், மாறு நிலையை மனத்தகத்தே பதித்துவைக்க வேண்டுமெனும் பேரவாக் கொண்டு, இதனை எழுத லானேன். இன்றைய சமூக அமைப்பால் வரும் இன்னல்களை ஒருவாறு ஊகித்தறிய, இந்நூல் வழிகாட்டி யாகுமென்பது எனது நம்பிக்கை. இதனுள்ளே காணப்படும் குறிப்புகளைத் திரட்டுதற்கு உடந்தை யாக விருந்த தோழர் என். எஸ். கணபதியின் மறைவு காரணமாக காலங்கடந்து வெளியிட நேர்ந்தது.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்' என்னும் முதுமொழிக் கிலக்காக, எண்ணற்ற கிராமங்களை யுடைய இந்தியாவின் உண்மை நிலையை விளக்க நேரூர் என்னும் ஒரே ஒரு கிராமத்தை மட்டும் ஒருவாறு ஆராய்ச்சி செய்துள்ளேன். இதில் ஏதேனும் மாற்றம் உண்டெனில், அதனைத் திருத்துதற்கு, அன்பர்கள் எனக்கு அறிவித்தல் கடமையாகும்.

அன்றி,

காரைக்குடி நகரசபைக் காங்கிரஸ் உறுப்பினரும், நகர சத்யாக்ரக கமிட்டி உப தலைவருமாகிய தோழர் வெ. சுப. சுப்பையா அம்பலம் அவர்கள், யுத்த நெருக்கடியால் அதிகரித்த பேப்பர் விலையை ஒரு பொருட்டாக் கருதாது, தேசப்பணியே சிறந்த பணியாகக் கொண்டு இதனை வெளியிடப் பொருளுதவி செய்த பெருந் தகைமைக்கு, என்றும் எமது வந்தனை உரியது. உயர்பணி பல வியற்றும் உறுதிகொண்ட அன்பர் நீடு வாழ்க.

காரைக்குடி,
19—5—41.

N. R. பத்மநாபன்,
ஆசிரியன்.

முன்னுரை

இச்சிறிய வெளியீட்டில் திரு. N. R. பத்மநாபன் அவர்கள் "நெரூர்" என்னும் சிற்றூரைப்பற்றிய தனது ஆராய்ச்சிகளை வரைந்துள்ளார். அவரைப்பற்றி நான் நன்கறிவேன். ஹரிஜன சேவா சங்கத்தின் ஆதரவில் ஆசிரியராகவும் ஊழியராகவும் கிராமங்களில் சிறந்த தொண்டு செய்திருக்கிறார்.

நெரூர், நீர்வள நிலவளங்கள் மிக்க காவிரி ஆற்றங்கரையில் உள்ளது. இந்த ஒரு ஊரின் நிலைமையினின்றும், நாம் நம் நாட்டின் பரிதாபகரமான நிலையை தெள்ளிதின் அறியலாம்.

கிராமமக்களை வாட்டும் வறுமைநோய் அறியாமை, மூட நம்பிக்கைகள், தாங்க முடியாத வரிப்பளு, அதற்கு மேல் கடன் சுமை, பயிர்த்தொழில் செய்யாத அயலூரினர் அல்லது பணம் படைத்த முதலாளிகள் நிலங்களின் பலனை விவசாயிகள் அடையாதபடி செய்யும் நிலை, பயிர்த் தொழில் போக பாக்கி காலம் வீணாகக் கழிதல், இவைகளை கண்கூடாகக் காண்கிறோம்.

இந்த நிலைமையை அப்படியே விட்டு வைத்துக் கொண்டிருக்கிறோம். இதனின் றும் நாட்டின் முதுகெலும்பு என்று போற் றப்படும் விவசாய மக்களை மீளச்செய்யாத் தக்க முறைகளை அனுபவ மார்க்கத்தில் கொண்டுவரும் சீரிய முயற்சிகளை, நாம் இன்னும் கண்டிலோம். பொருளாதாரத் துறையில் பெரும் புரட்சி உண்டுபண்ணி, தனிச் சொத்துரிமையை ஒழித்து, சமூக சமத்துவ சொத்துரிமையை விரைவினில் வலிந்து நிலைநாட்ட முற்பட்டிருப்பவருக்கு இந்நிலை ஊக்கம் அளிக்கக் கூடியதே. ஆனால், நாட்டில் அமைதியையும், ஆற் றொழுக்குப் போன்ற நிரந்தரமான முன் னேற்றத்தையும் விரும்பும் பெருநிலக் கிழவர்—பணக்காரர் — அறிஞர் — அர சாங்கம் ஆகியோர் விரும்பத் தக்கதல்ல. ஆகையால், இத்தகையோர் இக்குறை களைக் களைந்து கிராம முன்னேற்றத்திற் கான பல சீர்திருத்தங்களை விரைவினில் செய்ய முன்வருதற்கு, இந்த வெளியீடு முன்னெச்சரிக்கையாக உதவுமென்று நம்புகிறேன்.

தேவகோட்டை, 19—5—41.

சோ. இலட்சுமிரதன் பாரதி, M. A. B. L.

இந்நூல்
பொருளுதவியாளர்



ஸ்ரீ வெ. சுப. சுப்பையா அம்பலம்

நகராண்மைக் கழக உறுப்பினர்

&

நகர காங்கிரஸ் உப தலைவர்

காரைக்குடி

வந்தேமாதரம்

நாட்டின் உயிர் நிலை

நெரூர் ஓர் கிராமம்; திருச்சி ஜில்லாவைச் சார்ந்த கரூர் தாலுகாவில் இருக்கிறது. வளமிக்க காவிரியாற்றின் இடது கரையில் ஏறக்குறைய எட்டுசதுர மைல் பரப்பளவில் அமைந்திருக்கிறது. இங்கு மொத்தம் மூவாயிரத்து அறுநாற்று எட்டு ஏக்கர் நிலங்கள் பயிர் செய்யப்படுகின்றன. அதில் நீர்ப்பாசன வசதிக்காக காவிரியிலிருந்தும் பிரிக்கப்பட்ட கால்வாய் மூலம் பலனடைவது 1718 ஏக்கர்தான். பாக்கி 1890 ஏக்கரில் சுமார் 300 ஏக்கர் நிலங்களுக்குப் போதுமான அளவு தண்ணீர் கொடுக்கக்கூடிய நாற்ற்றைம்பது கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எஞ்சிய 1590 ஏக்கரும் வானத்தை எதிர்பார்த்தவை தான்.

நீர்ப்பாசன வசதியுடைய நிலங்கள் நல்ல உரமுடையன. தட்டுமுட்டின்றி வருடந்தோறும் தண்ணீர் கிடைக்கப் பெறுகின்றன. அங்கு குறைந்த கூலிக்கு அதிக வேலை செய்யும் கூலியாட்களும் எப்பொழுதும் கிடைப்பர்.

இவ்வசதிகளால் மிகவுஞ் சுறுசுறுப்பாக விவசாயம் நடைபெறுகிறது. முன்றுபோகம் நெல் சாகுபடி. செய்யப்படுகிறதென்றால் அதிகம் சொல்லத் தேவையில்லை. அன்றி கரும்பு, வாழை, மஞ்சள் போன்றவைகளும் பயிர் செய்யப்படுகின்றன. அவ்வசதியற்ற நிலங்களோ அவ்வளவு வளமுடையனவல்ல. அங்கு வெட்டப்பட்டிருக்கும் கேணிகளும் சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் கொடுக்கச் சக்தியற்றவை. நீர்ப்பாசன நிலங்களின் விளைச்சலானது, அந்த ஜில்லாவின் சராசரி விளைச்சலுக்கு அதிகமாகவே யிருக்கின்றது. நீர்ப்பாசனவசதியற்ற பிறநிலங்களின் விளைவைக் கணக்கிட்டுப் பார்த்தால் அந்த அபிப்பிராயம் தவறென்பது புலனாகும். ஏனெனில் புகையிலை, மிளகாய் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் அந்த நீர்ப்பாசனமற்ற நிலங்களில் பயிரிடவியலாது.

நெருரில் எல்லா வகுப்பு ஹிந்துக்களும் கொஞ்சம் கிறிஸ்தவர்களும் சில முஸ்லீம்களுமாகச் சேர்ந்து மொத்தம் ஜனத்தொகை 6200 ஆகும். ஹரிஜனங்களின் எண்ணிக்கை அதிகம். அந்த ஜில்லாவில் இது இரண்டாந்தரமான ஹரிஜனக் குடியிருப்பாகும். பிராமணர்கள்,

செட்டியார்கள் இன்னும் ஒருசில வகுப்பார்களைத் தவிர, ஹரிஜனங்களுட்பட எல்லா வகுப்பு ஹிந்துக்களும் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள். அங்கு இன்னும் அழிந்து போகாமல், உயிருடனிருக்கும் பழைய கைத்தொழில்களுள் பாய் பின்னுவது ஒன்றுதான் இன்று காணப்பெறுகிறது. இத்தொழில்மூலம் பத்துக் குடும்பங்கள் பிழைக்கின்றன. குதிரை வண்டி மாட்டுவண்டி ஓட்டுவதன் மூலம் 25 குடும்பங்கள் வாழ்கின்றன. பள்ளிக்கூட ஆசிரியர்கள் பத்துப்பேர், 4 கிராம அதிகாரிகள், 6 சேவகர்கள், 1 தபால் சேவகர், 1 போஸ்டுமாஸ்டர் ஆகியோர் சர்க்காரிடமிருந்தும் இதர சில ஸ்தாபனங்களிலிருந்தும் சிறிது தொகையை ஊதியம் பெற்று வாழ்கின்றனர். ஆற்றில் மீன் பிடிக்கும் உரிமை ஜில்லா போர்டின் அதிகாரத்துக்கு உட்பட்டது. ஆயினும் நீர்ப்பாசனக் கால்வாய்களில் மீன் பிடிக்கும் உரிமை தடுக்கப்படவில்லை. முக்கியமாக மேய்ச்சல் நிலம் என்று சொல்லத் தகுந்த முறையில் எதுவும் இல்லை. ஆனால் கிராமத்தார்கள் எப்படியோ மாடு கன்றுகளை வைத்துக் காப்பாற்றுகின்றனர். கோழி, வாத்து, ஆடு, பன்றி இவைகளை வளர்ப்பதன்மூலமும் மீன் பிடிப்பதன் மூலமும் ஒரு சில குடும்பங்கள் பிழைக்கின்றன. தேவையான

விறகுகளை எவ்வாற்றானும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். மாட்டு எருவும் கழிக்கப்பட்ட வைக்கோலும் விறகுக்குப் பதிலாக சில சமயங்களில் உபயோகிக்கப்படுகின்றன. தென்னை, மா, பலா முதலிய கனிதரும் மரங்களின் மூலம் சிலருக்கு வருமானமுண்டு. இக்கிராமத்தைப் பற்றிய முக்கியமான விஷயம் என்னவென்றால், நிலங்களின் பெரும்பகுதி வெளியூர் வாசிகளுக்குத்தான் சொந்தம். உள்ளூர் வாசிகளில் பெரும்பாலோர் கடன்சுமைக் காளானவர்கள். கிராமத்தில் போதுமான ஜனத்தொகையிருந்தும், வெளியூர்களிலிருந்து வேலைக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம், அடிக்கடி விளைபொருள்கள் மாற்றி மாற்றிச் சாகுபடி செய்வதேயாகும். அன்றி அச்சாகுபடிக் கேற்றவாறு நிலத்தைப் பண்படுத்த வேண்டியிருப்பதும் ஒரு காரணமாகும். உற்பத்திக்குரிய சாதனங்கள் மிகக் குறைவாக விருக்கிறபடியால், அங்குள்ளவர்கள் கொஞ்ச காலத்தில் அதிகமான வேலையைச் செய்துவிட்டு, நீண்டகாலம் வேலையின்றி வாடுகின்றார்கள். எங்கும் காணப்படுவதைப் போன்று, சொத்துரிமை நேர்மையான முறையில் பங்கிடப்படாத

தால் மிகப் பெரும்பான்மையாருக்கு தங்கள் யாக்கையைத் தவிர வேறெவ்வித சொத்தும் கிடையாது.

உற்பத்தி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணைகளின் மூலம், அந்தக் கிராமத்தின் உற்பத்திப் பொருள்களின் கணக்கு ஒருவாறு சித்திரிக்கப் பட்டிருக்கிறது. விவசாயிகள் பணம் கொடுத்தோ அன்றி இலவசமாகவோ பெற்றுக்கொண்ட உதவிகளைப்பற்றி இங்கு எதுவும் விவரிக்கப்படவில்லை. முடிவாக நிலத்தில் விளைந்தது எவ்வளவு அல்லது அதன் மூலம் வருவாய் எவ்வளவு என்பதைத்தான் இங்கு காட்டப்படுகிறது.

அட்டவணை 1 (A)

விவசாயத்தின் மொத்த வருமானம்.

[நீர்ப்பாசனவசதியுடைய நஞ்சைமூலம்]

நெல்:- (1318 ஏக்கர்களில் விளைந்தது) சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 50 கலம் வீதம், கலம் ஒன்றுக்கு சராசரி ரூ. 2-12-0 ஆக விலை	ரூ 1,81,225

ஏக்கர் ஒன்றுக்கு வைக்கோல் சராசரி ரூ. 10வீதம் மொத்தம் விலை	ரூ. 13,180.
*கரும்பு:- (200ஏக்கர்களில் சாகுபடி) ஏக்கர்ஒன்றுக்கு சராசரி 25பொதி வீதம், மொத்தம் விலை (பொதி ஒன்றுக்கு ரூ. 15 ஆக)	ரூ. 75,000.
+வாழை:- (100 ஏக்கர்களில் சாகுபடி) ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 600 குலை வீதம் மொத்தம் விலை (குலை ஒன்றுக்கு சராசரி ரூ. 0-5-4 வீதம்)	ரூ. 20,000.

---

* ஒரு வருடத்துக்கு அதிகமாகவே மார்க்கெட் நிலவரம் பொதி ஒன்றுக்கு ரூ. 13 ஆகவே இருந்தது. எப்படியானாலும் ரூ. 14 க்குமேல் போகவில்லை. அதனால் நிலத்துக்காரனுக்கு நிலத்துக்காக எதுவும் கிடைக்கவில்லை,

+ வாழைக் குலையின் விலை எப்போதும் ஒரே நிலவரத்தில் இருப்பதில்லை. ரூ. 0—5—4 க்குக் கீழே இறங்கிவிட்டால் (அடிக்கடி ஏற்படுவதுபோல்) அவனுக்கு நிலத்துக்காக எதுவும் கிடைக்காது. கரும்பும்.

மஞ்சள் போன்ற இதரபயிர்கள்:- (100 ஏக்கர்களில் சாகுபடி) ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ. 150 வீதம் மொத்தம் விலை.	ரூ. 15,000.
{ நீர்ப்பாசன வசதியின்றி கிணற்றுத் தண்ணீரால் பயிரிடப்படும் புஞ்சை மூலம். }	
300 ஏக்கர்களில் ஏக்கர் 1 க்கு சராசரி ரூ. 80 வீதம்மொத்தம் வருமானம்	ரூ. 24,000.
1590 ஏக்கர்களில் (மழையை எதிர்பார்த்தவை) ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 7 வீதம் மொத்த வருமானம்.	ரூ. 11,130.
தென்னை, மா முதலியவை மூலம் வருமானம்.	ரூ. 5,000.
ஆக மொத்தம் ரூ.	3,44,535

வாழையும் அதிக விலைக்கு விற்கலாமென்று எதிர் பார்த்துப் பயிர் செய்யப்படுவதால், பெரும்பாலோர் அடிக்கடி நஷ்டத்தையே அடைகின்றனர். நெற்பயிர் செய்வதைவிட கரும்பு வாழை முதலியன பயிர் செய் வதற்கு, அதிகமான மனிதவுழைப்பு தேவையாயிருப் பதால் அதிகப்படியான ஆட்களுக்கு அந்தப்பயிர்கள் வேலைகொடுக்கின்றன.

அட்டவணை 1 (B)

பணம் அல்லது தானியமாக கிராமத்துக்கு வெளியிலுள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்ட கூலிவிபரமும், விவசாயத்தின் மூலம் கிராமத்தின் நிகர்வருமானமும்.

(கூலியாகக் கொடுக்கப்பட்ட தானியத்தை மார்க்கட் நிலவரத்தை அனுசரித்து ரூபாயாக மாற்றிக்கணக்கிடப்பட்டிருக்கிறது.)

ஆற்றுப்பாசன நஞ்சை

நெல்சாகுபடி

* உரம், வெளியூர் களிலின்றும் வந்து உழைத்தவர்கள் கூலியுட்பட, ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ 32 விதம் 1318 ஏக்கருக்கு.	ரூ. 42,176.

---

* நெரூர் கிராம மக்கள் செய்தவேலை இதில் சேர்க்கப்படவில்லை. அதற்கு வெளியே இருந்து வந்து வேலை செய்தவர்களது கூலியின் மூலம் அக்கிராமத்தை விட்டு வெளியேறிய செல்வத்தைத்தான்குறிக்கப்பட்டிருக்கிறது.

கிராமத்திற்கு வெளியே யுள்ளவர்களுக்கு கூலியாகக் கொடுத்ததைத்தான் சாகுபடிச்செலவாகக் குறிக்கப்பட்டிருக்கிறதே யல்லாது, கிராமத்திலுள்ள

விதைநெல்	
2000 கலம், கலம் ஒன்றுக்கு சராசரி ரூ. 2-12-0 விதம்	ரூ. 5,500.
கரும்பு	
எரு, உரம், பயிரிட வெளியார்களுக்குக் கொடுக்கப்படும் கூலி யுட்பட ஏக்கர் 1 க்கு சராசரி ரூ. 210 விதம் 200 ஏக்கருக்கு	ரூ. 42,000.
விதைக்கரும்பு	
ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ. 40 விதம் 200 ஏக்கருக்கு	ரூ. 8,000.
வாழை	
உரம், வெளியார்களுக்கு கூலி, மூங்கில் வகையறுவுக்கு ஏக்கர் 1 க்கு சராசரி ரூ. 110 விதம் 100 ஏக்கருக்கு	ரூ. 11,000.
மஞ்சள் முதலிய ஏனைய பயிர்கள்	
எரு, உரம் வெளியார் கூலி, விதை ஆகியவையுட்பட ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ. 90 விதம் 100 ஏக்கருக்கு	ரூ. 9,000.

மாடு, பன்றி முதலியனவற்றின் எருக்களும், கிராம வாசிகளின் உழைப்பும் இதில் கணக்கிடப்படவில்லை.

கிணற்றுப்பாசனப் புஞ்சை நிலங்கள் .

சுமார் 300 எக்கருக்கு, உரம் வெளியார் கூலியுட்பட ஏக்கர் ஒன்றுக்கு சராசரி ரூ. 30 விதம்	ரூ.	9,000.

மழைபார்த்து விளையும் நிலங்கள்

1590 எக்கருக்கு, உரம்-வெளியார் கூலியுட்பட ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1-0-0 விதம்	ரூ.	1,590.
கிணற்று நீர்ப்பாசன நிலங்களுக்கும் மழைபார்த்து விளையும் நிலங்களுக்கும் விதைச்செலவு	ரூ.	3,000.
தென்னை, மா, கொய்யா முதலிய மரங்களுக்கு, உரம் வெளியார் கூலியுட்பட	ரூ.	1,000.
சாகுபடிச்செலவு ரூ.		1,32,266
விவசாயமூலம் மொத்த வருமானம்		3,44,535
நிகர் வருமானம் ரூ.		2,12,269

நிகர்வருமானம் என்று குறித்திருப்பது, அந்த கிராமத்தில் வெளியாட்களுக்குப் போக எஞ்சிய பொருளைக் குறிப்பதாகும். அதிலேதான் நிலத்தின் உற்பத்தியும் கிராமவாசிகளின் உழைப்பும் அடங்கியிருக்கிறது.

அட்டவணை 1 (C)

விவசாய சம்பந்தமில்லாத இதர வகைகள் மூலம் நிகர் வருமானம்.

சர்க்கார் சிப்பந்திகள், ஜில்லா போர்டு சிப்பந்திகள் சம்பள மூலம், மாதம் ஒன்றுக்கு ரூ. 500 விதம்	ரூ. 6,000.
குடிசைத் தொழிலாகிய பாய் முடைவது மூலம் 10 குடும்பங்களுக்கு, வருடம் ஒன்றுக்கு சராசரி ரூ. 100 விதம்	ரூ. 1,000.
மாட்டு * வண்டி, ஜட்காவண்டி வாடகை மூலம்	ரூ. 3,000.
வெளியூர்களிலிருந்து கோயிலுக்குவருமானம்	ரூ. 1,000.
கிராமத்திலுள்ளவர்களுக்கு உறவினர் மூலமும், வெளியாட்கள் மூலமும், ஏனையவகைகளிலும் கிடைக்கும் உதவி	ரூ 1,200.

* வெளியூர் ஆட்களிடமிருந்து கிடைக்கும் வாடகை மட்டும்.

கால்நடை வியாபாரம், பால் விற்பனை(1) ஆகியவைகள் மூலம்	ரூ.	2,400.
வைக்கோல், புல், வாழைச் சருகு, கொள்ளிமலைவிளைச்சல் முதலியன விற்பனை மூலம்	ரூ.	1,200.
விவசாயத்தின் மீதும், பிற தொழில்கள்மீதும், கிராமவாசிகள் கொடுத்திருக்கும் மூலதனத்திற்குவெளியிடத்திலிருந்து கிடைக்கும் வட்டி மூலம்	ரூ.	6,000.
தொழிலாளிகள் (2) வெளியிடங்களிலிருந்து சம்பாதிக்கும் வருமானம்	ரூ.	1,200.

(1) பிராமணர்கள், இன்னும் சிலரைத்தவிர மற்றவர்கள், பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவைகளை விற்று வருகிறார்கள். அவைகளுக்கு நெரூரின் ஆறாவது மைலிலுள்ள கரூரில் எப்பொழுதுமே கிராக்கி இருந்து வருகிறது.

(2) இன்றுள்ள பொருளாதார மந்தத்துக்குமுன், சிலோன், மலேயா நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வருடந்தோறும் வந்துகொண்டேயிருந்தன. சென்ற ஏழு ஆண்டுகளாக குறிப்பிடத் எவ்விதத்தொகையும் வரவில்லை.

பிரயாணிகள் மூலம் ரூ.	200.
விவசாயம் மற்றவழிகள் மூலம்	23,200.

கிராமத்தின் நிகர் வருமானம்
ரூ. (212269ம் 23200ம்) =2,35,469.

விவசாயத்தின் மொத்தவருமானத்தின் மூன்றிலொரு பகுதிக்கதிகம், எரு வெளியாட்கள் கூலி முதலியவை சம்பந்தமாக கிராமத்தை விட்டு வெளியேறுகிறது. ரசாயன சம்பந்தமான உரங்கள், கிராமத்தை விட்டு வெளியேறும் பணத்தின் பெரும்பகுதியைச் சாப்பிட்டுவிடுகின்றன. பயிர்களை மாற்றிச்சாகுபடி செய்யும் விஷயம் நன்கு ஆலோசிக்கப்பட்டு திருந்திய ஒரு திட்டத்தின் கீழ் நடத்தப்படுமாயின், கிராமத்துக்கு வெளியே யிருந்து வந்து உழைக்கும் வேலையாட்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். அன்றி கிராமத்து ஆட்களுக்கு அதிகப்படியான வேலையும் கிடைக்கும்படிச் செய்யமுடியும்.

கிராமத்தைப் பார்!

—காந்தி.

அட்டவணை 2.

[கிராமத்தை விட்டு வெளியேறும் பொருளும், கிராமவாசிகளின் செலவுக்கு எஞ்சியுள்ள பொருளும்]

நிலவரி நீர்ப்பாசன வரி மூலம்	ரூ.	30,000
கள் சாராயக் குத்தகைமூலம் சர்க்காருக்கு	ரூ.	6,000
கள்—குத்தகைக்கு விடும் மரங்களுக்கு வரியும், மரச்சொந்தக்காரர்களுக்கு குத்தகை வகையறுவும்.	ரூ.	6,000
தபாலாபீஸ் மூலம்	ரூ.	500
வெளியூர் மாட்டு வண்டி—குதிரை வண்டிகளுக்கு வாடகை கொடுப்பது மூலம்	ரூ.	2,000
வண்டிகள் பழுது பார்ப்பதன் மூலம் வெளியேறுவது	ரூ.	1,000
கால்நடை கொள்முதல் மூலம்	ரூ.	1,000

வெளியாரிடமிருந்து கிராம வாசிகள் வாங்கும் 5 * லட்சம் ரூபாய் கடனுக்கு வட்டி வருடத்துக்கு எட்டு சத விதம்	ரூ. 40,000

வெளியூர் வாசிகளாகிய நிலச்சுவான்தார்களுக்கு கொடுக்கும் குத்தகை விபரம்

ஆற்றுப்பாசன நஞ்சை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 90 விதம் நிலச்சுவான் தார்களுக்குச் சொந்தமான 900 ஏக்கருக்கு	ரூ. 81,000
கிணற்று நீர்ப்பாசன நிலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20 விதம் 100 ஏக்கருக்கு	ரூ 2,000

---

* மேலே குறிப்பிட்ட 5 லட்ச ரூபாய் கடன் நெரூர் கிராமவாசிகளாகிய நிலச்சுவான்தார்களுக்கு மட்டும்தான். வெளியூரிலிருக்கும் நிலச்சுவான்தார்களது கடன் இங்கு குறிப்பிடப்படவில்லை. எட்டு சதவிகித வட்டி என்பது மிகவும் குறைவானது.

மழை பார்த்து விளையும் நிலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2 விதம் 300 ஏக்கருக்கு ரூ.	600
	83,600
நிலவரி வஜாவும் வலைய வஜாவும் சேர்த்துக் குறைக்கப்பட வேண்டியது. ரூ.	13,250
நிலவரியின்றி வெளியூர் நிலச்சுவான்தார்களுக்கு குத்தகை மூலம் மட்டும்	70,350
	1,56,850
விவசாயம் விவசாயமல்லாத வலைய வகைகள் மூலம் கிராமத்தின் மொத்த வருமானம்	ரூ. 2,35,469
கிராமத்தினின்றும் வெளியேறும்	ரூ. 1,56,850
கிராமவாசிகளுக்கு எஞ்சுவது	ரூ. 78,619

கிராமவாசிகளின் சராசரி வருமானம் வருடமொன்றுக்கு ரூ. 12—10—11 பை.

கிராமத்தின் மொத்த நிகர் வருமானத்தின் மூன்றிலிரண்டு பகுதிக்கு நிகப், நிலவரி-ஆப்காரி வரி — வட்டித்தொகை- வெளியூர் நிலச்சுவான் குத்தகை ஆகியவை மூலம் சென்றுவிடுகிறது. நாளுக்குநாள் கச்சுவேகம் போன்று அதிகரித்து வரும் கோர்ட்டுச் செலவுகள் ஒருபுறமும், சிலரது ஒழுக்கக்குறைவால் நேர்மையற்ற வழிகளில் தாறுமாருகச் செலவு செய்யப்படும் நிலைமை ஒருபுறமும், நாகரீகச் சைத்தான் திருவிளையாடல் ஒருபுறமும், கிராமவாசிகளின் எஞ்சிய வருமானத்தின் பெரும் பகுதியையும் ஏப்பமிட்டுக் கும்மாளம் போடுகின்றன.

வளமிகுந்த இந்தப்பகுதியிலேயே மக்களின் சராசரி வருமானம் இவ்வளவு மோசமாகவிருந்தால், பிறவிடங்களில் கேட்கவும் வேண்டுமா? அன்றி பெரும்பான்மையோர் மிருகங்களிலும் கேவலமான வாழ்க்கை நடத்தி வருகின்றனர். தத்துவ விவேகமும், மனித வர்க்கத்திற்குரிய அறிவும், மேலே காட்டிய இலக்கங்களைப் பல முறைப் பெருக்கி மனோராஜ்யம் செய்யஉதவும். ஆனால் பிடரியைப் பிடித்தழுத்தும் தரித்திரப் பேயின் வசப்பட்டுத் துன்புறும் மனித வர்க்கத்தைக் கண்ணால் காண்பவர்களுக்கு, அவர்களது

சராசரி வருவாய் உண்மைதான் என்பது தென்னூறத் தெரியவரும். ஜனகணிதப்படி சராசரி வரி ரூ. 6—0—0 சர்க்காருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதன்படி வருட வருமானத்தில் ரூபாய் 6—0—0 ம் சர்க்காருக்குக் கொடுத்து விடுகின்றனர். மிதமிருக்கும் 6 ரூபாயில் தினசரி வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவையான உப்பு — மண்ணெண்ணெய் — நெருப்புப்பெட்டி ஆகியவை வாங்குவதன் மூலம் மறைமுகமான வரிகளும் தொந்தரவு கொடுக்கின்றன.

அக்கிராமத்துக்கு வேண்டிய ரோடு வசதிகளைப்பற்றியோ எதுவும் சொல்ல வேண்டியதில்லை. பள்ளிக்குச் செல்லும் வயதுவந்த குழந்தைகளில், ஆறில் ஒரு பகுதியினர்தான் அங்குள்ள பள்ளியில் பயிலுகின்றனர். சமாதானம் பாதுகாப்பு முதலியவைகள்தான் அவர்கள் சர்க்காரிடமிருந்து பெறும் நன்மைகள். ஜனத்தொகை 6200 இருந்தும் சரியான ஒரு வைத்தியசாலைகூடக் கிடையாது. கஷ்டப்பிரசவம்—காலரா-அம்மை-முதலிய நோய்கள் எண்ணற்ற நபர்களை தமக்கு இரையாக்குகின்றன.

வருடமொன்றுக்கு ரூ. 12 வருமானத்தில் எப்படி வாழ்க்கை நடத்துவது? என்பதை அவர்

கள் உணர்ந்திருந்தார்களில்லை. சர்க்காரால் வரி மூலமும் ஏனையவகையாலும் வாங்கப்படும் பணம் வெளியே கொண்டுபோகப்படாமல், அவர்களே உபயோகிக்கும்படியான நிலைமை அநுமதிக்கப் படுமாயின், மிக நன்றாக வாழ்க்கை நடத்த வியலும். அவர்களுக்கு அனேக சாமான்கள் இல வசமாகவும் மலிவாகவும் கிடைப்பதாக வைத்து தர்க்க ரீதியாகப் பார்த்தால், அவர்களது இன்றைய வருமானம்போல் பன்மடங்கு அதிகமாகு மென்று வேதாந்தம் பேசலாம். காற்று—தட்டில்லாத் தண்ணீர்—சூரிய வெளிச்சம்—நடமாடுவதற்கு இடம் இவைமட்டும் மனிதர்களுக்கு இன்பத்தைக் கொடுத்துவிட முடியாது. பெரும் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் நிலங்களைக் கொண்ட இப்பெரிய கிராமத்தில், கால்நடை மேய்ச்சலுக்கான நிலம் கிடையாதது ஓர் பெருங் குறை. இக்குறையானது அங்குள்ள கொஞ்ச வருமானத்தை யளிக்கின்ற கால்நடைகளின் வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாகும்.

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்"

—பாரதியார்.

அட்டவணை 3.

[நூற்று ஏக்கருக்கு மேல் ஆற்றுநீர்ப் பாசன நஞ்சை நிலங்களையுடைய நெரூர் கிராமவாசிகளின் கடன் விபரம்.]

நம்பர்.	சொந்த நிலத்தின் பரப்பளவு.	பிறசொத்து.	கடன்.
V. 1	24 ஏக்கர்.	10000	
V. 2	20 ,,		20000
V. 3	23 ,,		10000
A.	15 ,,	10000	
P. 1	20 ,,		20000
P. 2	12 ,,		10000
P. M.	15 ,,		10000
S.	15 ,,		
R. 1.	10 ,,		7000
R. 2	8 ,,		2000
M.	5 ,,	5000	
S.	10 ,,		
K.	10 ,,		
P. 2	7 ,,		3000
K.	7 ,,		3000

பெயர்களின் முதல் எழுத்து ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

I.	7	"	3000
N.	12	"	
N. I	5	"	
S. P.	1	"	5000
S. K.	7	"	5000
S. S.	6	"	5000
S. T.	5	"	3000
	250		1,06,000

பார்வைக்குப் பணக்காரர்களாகத் தென்படுவோருள் ஒரு சிலர்தான் கடன் வெள்ளத்தில் மூழ்காது தலையை வெளியே நீட்டிக்கொண்டிருக்கின்றனர். மற்றோரனைவரும் கடனாழியில் அமிழ்ந்து கிடக்கின்றனர். அதனின்றும் அவர்கள் மீட்கப்படும் நாள் எந்நாளெனக் கூறுதற்கில்லை. இன்றையப் பொருளாதார பந்தத்திற்கு முன்பே இம்மாதிரி நிலை ஏற்பட்டதெனின், இன்றைக்குக் கேட்கவும் வேண்டுமோ! கடன் தொல்லையினின்றும் விடுபடலா மென்றிருந்த சிறிது நம்பிக்கையையும் அவர்கள் இழந்துவிட வேண்டியதுதான். கடந்த 35 ஆண்டுகளுக்கிடையே சுமார் 800 ஏக்கர் நிலங்கள் கைமாறியிருக்கின்றனவென்றால், இன்னும் இரண்டு தலை

முறைகளுக்குள்ளாகவே நிலங்களெல்லாம் கிராமவாசிகளிடமிருந்து பிறர் கைக்கு மாறி விடுமென்று நாம் தானாகவே ஊகித்துக் கொள்ளலாம்.

ஐந்து ஏக்கருக்குமேல் ஆற்று நீர்ப்பாசன நிலங்களையுடைய மேலே காட்டிய 22 பேர்கள், மொத்தம் ஆற்றுப்பாசனநிலங்களின் நாலிலொரு பகுதியைத்தான் சொந்தமாக வைத்திருக்கின்றனர். இந்த 22 நபர்களுடைய வருவாயைக் குறைத்து மற்றைய நிலச்சுவான்-நிலமற்றவர்கள் இவர்களது வருமானத்தை மட்டும் சேர்த்து, சராசரி ஜன விகிதாசார வருமானத்தைக் கணக்கிட்டால், இல்லாமை உள்ளங்கை நெல்லிக்கனியென நமக்கு விளங்கிவிடும். அப்படிப்பார்த்தால் சராசரி வருமானம் வருடமொன்றுக்கு ரூ. 8-0-0 தான். இப்பரிதாபகரமான எண்ணிக்கை ஒன்றே வாசகர்கள் மூளையைக் கிளப்பி அதனாலெழும் கேள்விகளுக்கு பதிலையும் அளிக்கவல்லது. ஆகவே அதுபற்றி மேலே எதுவும் விவரிக்கத் தேவையில்லை.

வளமான நிலம்—தட்டில்லாத தண்ணீர் வசதி—சுறுசுறுப்பான முயற்சி—அந்த ஜில்லா

வின் சராசரி விளைவுக்கு அதிகமான சாகுபடி செய்யப்படும் தானியங்கள்—இவைகளிருந்துங் கூட, கிராமவாசிகளின் தாங்கொணு வறுமைப் பிணியைத் தடுக்க இயலவில்லை. விவசாயத்தினின் றும் கிடைக்கும் நிகர் வருமானம் ரூ. 212209 ஐ கிராமவாசிகளுக்குப் பகிர்ந்துகொடுத்தால், அவர் கள் இன்று அடைகின்ற வசதிகளைவிட மும் மடங்கு அதிக வசதிகளைப்பெறுவார்களென்பதில் ஐயமில்லை. இப்படிச்செய்வது சாதிக்க முடியாத ஒரு பெருங் காரியமாக விருக்கலாம். அப்படியே விநியோகிக்கப்பட்டாலுங்கூட நாகரீகவாழ்க்கை நடத்துவதற்குப் போதிய வசதிகளை அவர்கட்கு அளித்ததாகாது. சுறுசுறுப்பான சாகுபடியும் அதிகப்படியான வேலையாட்களுக்குத் தொழிலும் கொடுத்தாலும், ஒரு வருடத்துக்கு அத்தனை பேருக்கும் போதுமான வேலை அளிப்பதாகாது. வேலை செய்பவர்களில் பெரும்பாலோர் வருடத் தின் பெரும் பகுதியை வேலையின்றித் தவிக்கும் படி நிர்ப்பந்திக்கப்படுகிறுர்கள். இந்தமாதிரி நிலைமை தவிர்க்கப்படவேண்டுமாயின், வருட முழுதும் வேலை கிடைக்கக்கூடிய வேறுவதேனும் தொழில்களில் அவர்களைப் பிரவேசிக்கும்படிச் செய்யவேண்டும். அல்லது விவசாய நேரம்

போக பாக்கி நேரங்களில் பிறதொழில்களை அவர்கள் கைக்கொள்ளவேண்டும். பயிர் விளைவிப்பது மாற்றிப் பயிர்செய்வது போன்ற விஷயங்கள், நன்கு ஆலோசித்து முடிவுகண்ட ஒரு திட்டத்தின் கீழ் அமைக்கப்படுமானால், சில சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்த வேலையாட்களும் வந்து வேலை செய்யவேண்டிய அவசியத்தை ஒருவாறு ஒழித்து, எப்போதும் எல்லோரும் நிரந்தரமாக வேலைசெய்யும் வழியை உண்டுபண்ணலாம். ஆற்றுப்பாசன நிலங்கள் பருவத்தை எதிர்பார்த்துச் சாகுபடி செய்யவேண்டியவையல்ல. ஆகவே பயிர்ச் சாகுபடி செய்வது—விளைபொருள்களை மாற்றிப் பயிர்செய்வது போன்ற விஷயங்கள் சம்பந்தமாகத் திட்டம் தயாரிப்பது அவ்வளவு சிரமமல்ல.

குடிசைத் தொழில்கள் மனதைக் கவர்வனவாக விருப்பினும், எதிர்காலப் ஆலைகளுக்கு அவ்வளவு நன்மை பயக்கக்கூடியதாயில்லை. அந்நிய நாடுகளுக்குச் செல்வதோ, இங்கு உண்மையிலேயே அதிக வேலை கிடைக்காமல் திண்டாடுபவர்களுக்கு ஒரு சாதகம். ஏனெனில் அவர்களுக்கு அங்கு நிரந்தரமான வேலையும் அதிக வருமானமும் கிடைக்கிறது. விவசாய சம்பந்த

மான கைத்தொழில்கள் சிறிய அளவில் வளர்ச்சி செய்யப்பட்டால், அதன் மூலம் சிலருக்கு வேலை கிடைக்குமாறு செய்யலாம். கரும்பு ஆலை வைத்தல்-வாழை சம்பந்தமானவற்றை பயன்படுமுறையில் பதனிடுவது—வற்றல் போடுவது போன்ற தொழில்களைச் செய்வதற்கு ஒரு ஸ்தாபனம் நிறுவப்படுமாயின் பலருக்கு வேலையும் நல்ல வருமானமும் தேடமுடியும்.

மாட்டு எரு சம்பந்தமான பிரச்னையானது மேய்ச்சல் நிலம் ஏற்படுத்துவதன் மூலமும் மற்றைய வசதிகள் செய்து கொடுப்பதன் மூலமும் ஒருவாறு தீர்க்கவியலும். அந்தக் காலத்தில் தான் பால்-தயிர்—நெய் முதலிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு, இன்றைய நிலையைக் காட்டிலும் உர சம்பந்தமான தேவைகளும் பன்மடங்கு அதிகமாகப் பூர்த்தி செய்யப்படும். மேற் கூறிய உண்மைகள் நிலத்தை மட்டும் நம்பி வாழ்வோரது மனதைச் சிறிது மாற்றி அவர்களுக்கு அதிக வருமானத்தையும் கொடுக்கும்.

இன்னொரு பரிதாபகரமான கூற்று. நிலச் சொந்தக்காரர்களில் பெரும்பாலோர் வெளியூர் வாசிகள். அவர்கள் விவசாயிகளல்ல. நிலத்தில் விளைந்த தானியம் அல்லது அதற்குப்பதிலாக

அடையும் பணத்தை, தாங்கள் வசிக்கும் இடங்களிலேதான் செலவு செய்கிருர்கள். நிலங்களுக்குப் பணம் கொடுத்ததால் அவைகளின் சொந்தக்காரர்களாகிவிட்டார்கள். ஏனெனில் பணத்தை பத்திரமாக வைப்பதற்கு வேறு சுலபமான வழி கிடையாது. அன்றி சமூகத்திலிடையே ஒருவித அந்தஸ்தும் கிடைக்காது. ஆதலால் அவர்கள் தமது குத்தகைப் பொருளில்தான் கண்ணுங் கருத்துமாக விருப்பார்கள். இன்றைய வறுமையின் கொடுமையால் நடக்கும் போட்டியில்,எவன் அதிகமாகக் குத்தகை கேட்கிருன்? என்பதைத் தான் கவனிப்பார்கள். நிலத்தின் சாகுபடி சம்பந்தமாக எவ்விதக் கவலையும் அவர்களுக்கு கிடையாது. விளை நிலங்களில் பாதிக்கதிகம் தம் வசமிருப்பதாலும், நகரங்களில் அழுக்குப்படாது இருந்த இருப்பிலேயே கொழுத்த லாபம் கிடைப்பதாலும், விவசாயத்திற்கு எந்த வித முன்னேற்றமும் அவர்கள் பார்வையால் ஏற்படுவதற்கில்லே. நிலச்சொந்தக்காரன் தினந்தோறும் நிலத்தைப் பார்வையிடாதிருப்பின், வெறுத்துத் தள்ளிய மனேயாளின் நிலேமை யொக்கு மென்பது முதியோர் முது மொழி. ஆனல் இந்தச் சுவான்தார்கள் அம்மொழிக்கு மாறுபட்டவர்கள். அதனுல்

நிலங்கள் கெட்டுவிடுகின்றன. மக்களும் சக்தி யிழந்தவர்களாகிறார்கள். கடைசிப் பலன்—சம் பந்த முள்ள அனைவருக்கும் பெரும் நஷ்டந்தான்.

கடன்சுமை பிறிதொரு சாபக்கேடு. அது ஒவ்வொரு மனிதனையும் கண்விழி பிதுங்கச் செய்கிறது. பார்வைக்கு வளமுள்ள பூமிதான். ஆனால் கடனில் ஆழ்ந்துகிடக்கிறது. இயற்கை யான நிலத்தில் மனித உழைப்பு மூலம் வெளி வந்த உற்பத்தியின் பெரும்பாகத்தை வட்டிப் பிசாசு தட்டிப் பறிக்கிறது. அதோடு அங்குள்ள மக்களும் வீண் செலவு செய்கிறார்கள். இந்த வீண் செலவுக்கு அவர்களும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். ஆனால் கடன் சுமை வீண்செலவினால் மட்டும் ஏற்பட்டதல்ல. தங் கள் தவிர்க்க முடியாத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வாங்கிய கடன்தான். நல்ல விளைவில்லாத நிலங்களையுடைய கிராமங்களில் வேண்டுமானால் கடன் சுமையில்லாதிருக்கலாம். இம்மாதிரிக் கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் கடன் சுமைபற்றி எவ்வாறு வரைவது? குறைந்த வட்டியாகவும் அதுவும் விவசாய உற்பத்திச் செலவுக்காக மட்டும் கடன் கொடுக்கப்படுவ தாகவும் இருத்தல் நலம். ஆனால் இப்

பொழுது நடைபெறுவது அப்படியல்ல. சொத்துடைய ஒருவனுக்கு மிகக் குறைந்த விகித வட்டிக்கு தாராளமாகக் கடன் கிடைக்கிறது. அவன் அதை குடி—சூதாட்டம்—விபசாரம் போன்ற கெட்ட துறைகளில் செலவு செய்கிறான். ஏழை விவசாயியோ நிலத்தில் உற்பத்தி செய்யவும், சில இன்றியமையாத் தேவைக்கும் வாங்குகின்ற கடனுக்கு, அநியாய வட்டி கொடுக்கவேண்டியிருக்கிறது. நிலச்சுவான்களோ கடன் பூதத்தால் கொஞ்சங் கொஞ்சமாய் விழுங்கப்பட்டு, நிலத்தைக் கொறுவை வைத்தும், முடிவாக விற்பனை செய்தும் ஓட்டாண்டியாகி விடுகிறார்கள். கடன் கொடுத்தவர்கள் உடனே அந்நிலங்களுக்குப் புதிய சொந்தக்காரர்களாகி விடுகிறார்கள். அவர்களும் தங்கள் காலத்தில், முன்னைய நிலச்சுவான்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி, புதிய முதலாளிகளை உண்டுபண்ணச் சிறிதும் தயங்குவதில்லை.

நிலமில்லாதவர்களோ கடனால் பிடிக்கப்பட்டு அயலூர் சென்று விடுகிறார்கள். அவர்களிருந்த இடத்தில் வேறு சிலர் வந்து அந்த நுகத்தடியைத் தாங்கள் மாட்டிக்கொள்ளுகின்றனர். அல்லது பழைய ஆசாமிகளே காடுமேடெல்லாம்

சுற்றித் திரிந்துவிட்டு மீண்டும் அந்த இடத்தை நிரப்புகிறார்கள். காலம் இப்படியே சுழன்று கொண்டிருக்கிறது. இதனிடையே சில நிலச் சுவான்தார்கள் கடன் வலையினின்று தப்புதற்கு முயற்சி செய்கின்றனராயினும், அந்த முயற்சியில் தங்கள் இயற்கை சக்தியையுமிழந்து நிலங்களையும் உரமற்றதாகச் செய்ய நேரிடுகிறது. அதனால், எதிர்காலத்தில் நிலம் நல்ல பயனளிக்க இயலவில்லை.

விவசாயிகளின் நியாயமான தேவைகளுக்கு மிகக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்துதவ பாங்கிகள் அமைக்கப்படுமாயின் இந்நிலைமை தவிர்க்க முடியும். ஆனால் உண்மையாகத் தீர்க்கப்படவேண்டியது மக்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் பிரச்னைதான்.

ஜனங்கள் தங்கள் சராசரி வருமானத்தில் 50 சத விகிதம் வரியாக சர்க்காருக்குக் கொடுக்கிறார்களென்று முன்னரே குறிப்பிட்டோம். மிக மிகக் குறைந்த சராசரி வருமானமுள்ள ஜனங்களுக்கு, தங்கள் செலவிற்காகக் கிடைக்கும் சிறு தொகையின் சரிபாதியை வரியாகச் செலுத்துவதென்பது, தாங்க முடியாத எவ்வளவு

பெருஞ் சுமை என்பது தெளிந்த உண்மை. நிலமும் மனித உழைப்பும் சேர்ந்து கொடுக்கும் நிகர் வருமானம் ரூ. 212269ல், தீர்வை மூலம் ரூ. 30000 த்தை தண்ணீர் சப்ளைக்காகவும் நிலத்திற்காகவும் சர்க்கார் பெற்றுக்கொள்கிறது. கிராமத்திடமிருந்து சர்க்கார் அடையும் வருவாயைவிட ஒரு மடங்கதிகமான வருமானத்தைக்கூட அந்நிலங்கள் சாதாரணமாக உண்டு பண்ண சக்தியற்றிருக்கின்றன. . கிராமவாசிகள், தாங்கள் கொடுக்கும் இத் தீர்வைகளுக்குப் பதிலாக அடையும் முக்கிய நன்மைகள் அமைதியும் பாதுகாப்புமாகுமென்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இந்த நன்மைகள் அவர்களுக்கு எவ்வித பலனும் அளிப்பதாயில்லை. ஏனெனில் மிகப் பெரும்பான்மையோருக்கு தங்கள் உயிரையும் உடலையும் தவிர, சேமித்து வைக்கவேண்டிய பொருள்களோ-பாதுகாக்கப்படவேண்டிய பொருள்களோ எதுவும் கிடையாது. அவர்கள், தங்கள் இன்னல் மலிந்த வாழ்க்கையால் மனம் நொந்து வாழ்க்கையில் கசப்புடையோராகி விட்டனர். உயிர் மீதுள்ள ஆசையும், வாழ வேண்டுமென்ற நினைவும் அவர்களை விட்டுப் பிரிந்து பறந்தோடிவிட்டன. கூடுமானால் தங்

கள் துன்ப வாழ்க்கையின் முடிவுதான் என்ன வென்பதைக்காண விரும்புகிறார்கள். அமைதிக் காக நிறுவப்பட்டிருக்கும் திட்டங்கள் அவர் களது வறுமையை நீடிக்கச் செய்வதால் எவ்வித பாதுகாப்பையுங்கூட அவர்கள் விரும்புகிறார்க ளில்லை.

ஆப்காரி சம்பந்தமான வரியைப்பற்றிச் சிறிது அதிகம் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த வரியானது நிலமில்லாதவர்களும் கூலி வேலை செய்பவர்களுமான ஏழைகளிடமிருந்தே தான் கிடைக்கிறது. இவர்களது வருவாயோ மிகவும் கொஞ்சம், ஆனால் மது வருந்தினால் தங் கள் கஷ்டத்திற்கு சாந்தி கிடைக்குமென்ற ஒரு வகை அறியாத்தனம் அவர்களைப் பிணைத்திருக் கிறது. அதனால் தமது கொஞ்ச வருவாயையும் கள்—சாராயக் கடைகளில் கொடுத்து விட்டு வெறுங்கையுடன் வீடுதிரும்ப நேரிடுகிறது. கிரா மங்களில் அடிக்கடி நடைபெறும் சிறு சிறு கலகங்களுக்கெல்லாம் முக்கிய காரணம் இந்தக் குடிவகைதான். அமைதி நிலைநிறுத்துவதையே முதல் கடமையாகக் கொண்ட அரசாங்கம், ஆப்காரி இலாகாவை கிராமந்தோறும் அமுல் நடத்துவதால், இத்தகைய நேர்மைக் குறைவுகள் காணப்படுகின்றன. இவ்வுண்மையை எவரும்

மறுக்கமாட்டார்கள். சொத்துடையோர் வேறு பல பயனற்ற வழிகளில் காசைக் கரியாக்கு கின்றனர். ஏழைகளோ குடிப்பழக்கத்தால் கைக் கெட்டிய சிறிதளவு கூலிப்பணத்தையும் இழந்து விட்டு வறுமைப் படுகுழியில் விழுந்து புரளு கின்றனர்.

மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டபடி 22 நபர்களுக்கு 250 ஏக்கருக்கு அதிகமாகச் சொந்த நிலங்களிருக்கின்றன. ஐந்து ஏக்கருக்கு குறைவாக நிலமுடையவர்கள் பலரிருக்கின் றனர். எவ்வித சொத்து மில்லாதவர்களின் எண்ணிக்கையோ மிக அதிகம். எவ்வாறாகிலும் ஜனத்தொகையில் எண்பது சதவிகிதம் எவ்வித சொத்துமில்லாதவர்கள். இவர்கள் தங்கள்-உடல் உழைப்பினாலே தான் வாழவேண்டியவர்களாக விருக்கின்றனர். சொத்துரிமை சமமாகப் பங் கிடப்படவேண்டுமென்னும் கொள்கை எல்லாப் பகுதிகளையும்விட நெருருக்கு மிகவும் அவசிய மாகிறது. ஒரு சிலர் மட்டும் அளவுக்கு மீறிய சுகபோகங்களை யனுபவிக்க, அதே சமயத்தில் மற்றவர்கள் சிறு குடலைப் பெருங்குடல் தின் னும் பட்டினியால் வாடுவதும்—சிலருக்கு உயிர் வாழ்வதே பெரும் பாரமாகத் தோன்றுவது

மான காட்சிகள் அங்கு மிக எளிதாகின்றன. சொத்துதான் உயர்வாக மதிக்கப்படுகின்றதே யன்றி, மனிதனும் மனித உழைப்பும் மிக மிகக் கேவலமாக கருதப்படுகின்றன. ஜனங்களின் "சராசரி வருமானம்" என்பதை நுணுகி ஆராயப் புகுந்தால் ரிஷி மூலம் நதி மூலம் நிலைக்கு வருவதுடன், திடுக்கிடத் தகுந்த பல உண்மைகளும் மறைந்து கிடக்கும் நியாய உணர்ச்சிகளும் விளங்காமல் போகாது. அத்தகைய ஆராய்ச்சித் துறையை நம் வாசகர்களின் அறிவுக்கு விருந்தாக அளித்து விடுவதுதான் பொருந்தும்.

இது ஒரு பெரிய பிரச்னை. இதனைத்தீர்க்கும் வழி, தேசம் முழுதும் சேர்ந்து அமைக்கப்படும் திட்டத்தினால் மட்டும்தானாகும். சாதாரணமாக மனித உழைப்பு அவனது தேவைகளை நல்குவதாயிருத்தல் வேண்டும். நாளை வேண்டுமென்று சேமித்து வைக்கும் கவலை, இன்றைக்கிருப்பதைப் போன்று பெரும் பாரமாக இருத்தலாகாது. நடைமுறை யமைப்பால், உற்பத்தி முறை அதிகரிக்கப்பட்டு ஏராளமான உற்பத்தி கிடைத்தாலும், ஏழை எளியவர் துன்பம் அதிகமாக ஒன்றும் நீங்கிவிடாது. ஆகவே இயற்கை வளமும் மனித உழைப்பும் சேர்ந்து உண்டு

பண்ணும் பொருள்கள் என்றைக்கு நேர்மை யாகப் பங்கிடப் படுகிறதோ அன்றுதான் ஏழை துயர் நீரும். நேர்மை துலங்கும். நீதி விளங்கும்.

மிகவும் செல்வமுள்ள பாகத்திலமைந்ததும் சாதாரணமாகவே சுறுசுறுப்பாக வேலைபார்க்கும் ஜனங்களையும் கொண்ட இந்தக் கிராமமானது, மேலெழுந்தவாரியாக ஒருவர் நினைக்கும் அளவிற்கு, அங்குள்ள கிராமவாசிகள் நிலைமை நமக்குக் காட்சியளிக்கவில்லை. வளமுள்ள கிராமமே இந்தக் கதியானால், நிலவள நீர்வளமில்லாத மற்றக் கிராமங்களின் கதி என்னவாக விருக்குமென்பதை நினைக்குங்கால், தலை சுற்றுகிறது—பேனமுனை உணர்ச்சியற்று நின்று விடுகிறது. இயற்கையன்னை மோசம் செய்தாளா? இல்லை—இல்லை. ஒருபொழுது மில்லை. மனிதனே இதற்குக் காரணமாக—வினையாக, எமனாக நிற்கிறான். நேர்மையாகத் தன்னலமற்றுச் சிந்தித்து விதிகள் செய்யப்படுமாயின் எல்லோரும் கவலையற்ற இன்பவாழ்வை யடைய முடியும். அந்த நிலைமை ஒரு காலத்தில் நிச்சயமாக வந்துதானாகவேண்டும். அதிற் சிறிதும் சந்தேகமில்லை.

இதற்கு அரசியல் வேட்கை கொண்ட ஊழியரென்போரும் தலைவர்களென்போரும் எம்மான் காந்தியடிகளின் பொன்மொழியை மனதில் நன்கு பதிய வைத்தல் அவசியமாகும். "கிராமத்துக்குப்போ — அங்குதான் நாட்டின் உயிர்நிலை தேங்கித் தத்தளிக்கிறது." என்கின்றார். இதன் உள்ளுறைப் பொருளை நன்கு சிந்திக்கின், கிராமங்களில் செய்யப்படும் வெறும் அரசியல் பிரசாரம் மட்டும் எவ்வித பலனையும் கொண்டுவந்து விடாது. ஆனால் கிராமங்களை நாடிச் செல்லுவோர் ஆங்காங்கு என்னென்ன குறைபாடுகள் காணப்படுகின்றன வென்பதை உள்ளூரக் கவனித்து, அதற்கு வேண்டும் பரிகாரங்களை உடனடியாகச் செய்தால்தான் நன்மையுண்டு என்பது வெள்ளிடை மலையென விளங்கும். ஆகவே அதற்கானவை செய்யும் ஊழியமே தேசியத் திருத்தொண்டர் தம் கடமையாகும். இம்முயற்சி கைகூடுமாயின் நாகரீகம்—கல்வி —அறிவு—வாழ்க்கை வசதி— சரிநிகர் சமானமான உரிமை ஆகியன பெற்று இன்பவாழ்க்கை நடத்தும் மக்களை நெளுர் போன்ற கிராமங்களில் சந்தித்து, இன்புறும் நன்னாளை விரைவில் காணலாம்.